1973 ஏப்ரல் 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய பணிகள்பற்றிய முழு விவரம் தெரியவில்லை. பாரதிய வித்யாபவனம் அதனுடைய கிளை ஒன்றைச் சென்னையில் அமைக்க 1,60,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டடத்தை வாங்குவதற்கு நம்முடைய அரசு மானியம் வழங்க வேண்டுமென்று 1963-லே கேட்டார்கள். அவர்கள் கோரிக்கையைப் பரிசீலித்து 25,000 ரூபாய் மானியமாக இந்த அரசு கொடுத்தது. ஆனால் அதனுடைய பணி விவரங்களுக்கான தகவல் இல்லை.

கன்னியாகுமரி மாவட்ட நகரப் பஞ்சாயத்துக்களின் வருவாய் தரும் திட்டங்கள்

* 632. வினா—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73-ம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் பஸ் நிலையம், சந்தை அபிவிருத்தி போன்ற வருவாய் தரும் திட்டங்களை (Remunerative Enterprises நிறைவேற்றுவதற்கெனக் கடன் கோரி அரசுக்கு எத்தனை மனுக்கள் அனுப்பியுள்ளன ?

(இ) அந்நகரப் பஞ்சாயத்துக்கள் எவை எவை ?

(உ) அவற்றில் இந்த நிதி ஆண்டில் எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன ?

(எ) எவற்றிற்கேனும் கடன் வழங்கப்படாமலுள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ), (உ), (எ) &(ஐ) பிரதிபலன் தரும் திட்டத்தின்கீழ் (Scheme for remunerative enterprises) 1972–73 நிதியாண்டில் அரசு கடனுதவி கோரி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எந்தப் பேரூராட்சியிடமிருந்தும் கடன் விண்ணப்பங்கள் வரவில்லை.

Dam across river Kushastali

* 633 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct a bed-dam across the river 'Kushastali' at Arumbakkam in